# சிங்கள நடனம்

## பாடத்திட்டம்

## தரம் 7

**(2016ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)**

**அழகியற் கல்வித் துறை**
**தேசிய கல்வி நிறுவகம்**
**ஸ்ரீ லங்கா**
**www.nie.lk**

பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1.0 | அறிமுகம் | 01 |
| 2.0 | தேசிய இலக்குகள் | 02 |
| 3.0 | அடிப்படைத் தேர்ச்சிகள் | 03 - 04 |
| 4.0 | பாடத்திட்டத்தின் நோக்கங்கள் | 05 |
| 5.0 | பாடத்திட்டம் | 6 - 11 |

## 1.0 அறிமுகம்

கலைத்திட்டமானது 2007ம் ஆண்டின் கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைவாக தேர்ச்சியை மையமாகக் கொண்ட கற்றல் கற்பித்தல் செயற்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு விருத்தியாக்கப்பட்டுள்ளது. தரம் 7 மற்றும் தரம் 11 இற்கான விருத்தியாக்கப்பட்ட பாடத்திட்டமானது 2016 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்தப்படவுள்ளது.

வகுப்பறைக் கற்றல் கற்பித்தற் செயற்பாட்டினை அவதானித்ததன் மூலம் மற்றும் சீர்திருத்த அறிக்கையிலிருந்து வெளிக்கொணர்ந்த கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு நடன பாடத்தின் கோட்பாடு மற்றும் உள்ளடக்கம் சீரமைக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் அதிக கவனமானது பின்வரும் விடயங்களில் செலுத்தப்பட்டுள்ளது.

- சூழல் சார்ந்த செயற்பாடுகளில் மாணவர்களின் பங்களிப்பை மேம்படுத்தல்.
- தாள மற்றும் குறியீட்டுமுறை தேர்ச்சியடைதல் ஆற்றலை விருத்தியாக்கல்.
- பஹாவ மற்றும் கதாபாத்திர பிரதிநிதித்துவ திறனை வளர்த்தல்.
- செயற்பாடுகளினூடாக கீழைத்தேய நடன, பாடல் மற்றும் இசைக்கருவியாக்கம். நடனம், பாடல், இசைத்தல் போன்றவற்றை நிர்மாணிக்கத் தூண்டுதல்.
- உள்ளக பல்கலாசார இனங்களுக்கிடையிலான சமாதான சகவாழ்வை வளர்த்தல் மற்றும் பேணல்.

நல்லதொரு சமூதாயத்தை உருவாக்குவதில் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவை உதவும் என்பது போல சிந்திக்கும் ஆற்றல், சமூக ஆற்றல் தனிநபர் ஆற்றல்களை வளர்க்கவும், கலைப்படைப்புக்களை விமர்சிக்கவும், நயக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது. தேசிய கலாசார சொத்துக்களை அழிய விடாது பேணிப் பாதுகாக்கத் தேவையான பின்னணியை உருவாக்கத் தேவையான சக்தியை வளர்ப்பதன் மீதும் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கல்வியின் நவீன கோட்பாடானது செயற்பாட்டு மைய, மாணவமைய கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுடன் உறுதியான இணைப்புடன் உருவாக்கப்பட்டுள்ளது. எனவே மாணவர்கள் எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டத்தை அடைவதற்குரிய திறன், நடனம் சார்ந்த தேர்ச்சிகள் மைய நவீன அணுகுமுறைகள் மூலம் வழங்கப்படுகிறது.

## 2.0 தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலானகல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கரு திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலம் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

தேசிய கல்வி ஆணைக்குழு

முதலாவது அறிக்கை (2003 திசெம்பர்)

## 3.0 அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

**(i)** தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழில் நுட்பத் தகைமை

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல் ஒழுங்குமுறை யாக அளத்தல்.

சித்திர அறிவு : கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் என்பனவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழில்நுட்பத் தகைமை : கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

**(ii)** ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்.
- மனஎழுச்சிகள், நுண்ணறிவு

**(iii)** சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

**இத்தேர்ச்சிகள் சமூகம், உயிரியல், பௌதிகம் போன்ற சூழல்களுடன் தொடர்புறுகின்றன.**

சமூகச் சூழல்:

**தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும் பகிர்ந் தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்**

உயிரியல் சூழல்:

**வாழும் உலகு, மக்கள், உயிரியல் சூழல் தொகுதி, மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.**

பௌதிகச் சூழல்:

**இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும். கற்றலுக்கும், வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளக்கப்பட்டுள்ளன.**

**(ஐ)**வேலை உலகிற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்

**அவர்களது சக்தியை உச்ச நிலைக்கு கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள் பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.**

**அவர்களது தொழில் விருப்புகளையும், உளச் சார்புகளையும் கண்டறிதல்.**

**அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல் பயனளிக்கக்கூடியதும் நிலைபேறுடையதுமான சீவனோபாயத்தில் ஈடுபடல்.**

**(எ)** சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்

**அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.**

**(ஏ)**ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்

**அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வுநேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவை போன்ற மனித அனுபவங்கள்.**

**(ஐ)** கற்றலுக்குக் கற்றல் தொடர்பான தேர்ச்சிகள்

**விரைவாக மாறுகின்ற சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும், வெற்றியையும் பெறச் செய்தல்.**

4.0 நடன பாடத்தின் நோக்கங்கள்

- இயற்கை மற்றும் செயற்கையான வெளிப்படைச் சூழலின் கலைப்படைப்பின் பெறுமதிகளை இனங்காணவும், அதன் முக்கியத்துவத்தைச் சரியாக உணர்ந்து கொள்ளவும் அதனைப் பாதுகாக்கவும் கூடிய மனப்பாங்கினை கண்ணியத்துடன் விருத்தி செய்தல்.

- சமூக மற்றும் தனிநபர் திறனை விருத்தி செய்வதன் மூலம் உயர் வாழ்க்கைத் தரத்தை உருவாக்கி அதன் மூலம் தனிநபர் உலகத்தை எதிர் கொள்ளக் கூடிய திறனை நடன பாடம் சார்ந்த செயற்பாடுகளின் மூலம் விருத்திசெய்தல்.

- அன்றாட வாழ்வில் ஏற்படும் பல்வேறுபட்ட பிரச்சனை நிலைமைகளை ஆக்கபூர்வமாக எதிர்கொள்ளல் மற்றும் நடன பாடம் தொடர்புடைய ஆக்கபூர்வமான படைப்புக்களை உருவாக்கத் தேவையான ஆக்கத்திறன் மற்றும் ஆக்கச் சிந்தனையை விருத்தி செய்தல்.

- நடன பாடம் தொடர்பான கலாசாரப் பின்னணியினூடாகப் பெற்றுக்கொண்ட அனுபவங்களைக் கொண்டு, தேசிய கலாசாரப் பெறுமதிகள் மற்றும் ஏனைய கலாசாரங்களின் உள்ளகப் பிரிவுகளை இனங்காணவும், மதிக்கவும், பாதுகாக்கவும் கூடிய சரியான மனப்பாங்கை விருத்தி செய்தல்.

- பல்வேறுபட்ட தொடர்புசாதன ஊடகங்கள் மூலம் பரப்பப்படும் பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளைத் திறனாய்வு செய்யவும் மற்றும் அவற்றின் மதிப்பைச் சரியாக உணர்ந்து கொள்ளவும் கூடிய திறனை வளர்த்தல்.

- வெற்றிகரமான வாழ்க்கை முறைத் தேவைக்காக உடல் மற்றும் உளம் சார்ந்த ஆரோக்கிய நிலைகளை விருத்தி செய்தல்.

பாடத்திட்டம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 1.0 சூழலை அவதானிப்பதன் மூலம் பெற்றுக் கொண்ட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு நடனத்தை உருவாக்குவார். | 1.1. சூழலை அவதானிப்பதன் மூலம் பெற்றுக்கொண்ட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு, பல்வேறு விதமான நடனங்களை உருவாக்குவார். | • சூழலை நயத்தல்.<br>நாளாந்தம் சூழலில் ஏற்படும் மாற்றங்களை ஆராய்ந்தறிந்து கலந்துரையாடுதல்<br>• மழை நாட்களில் காணக்கூடிய விசேட நிலைமைகள் (காற்று, இடி இடித்தல், மின்னல்)<br>• மழை என்னும் கருப்பொருளிற்கு ஏற்றவாறு நடனத்தை உருவாக்குதல் | • சூழலை இரசிப்பதுடன் மழை எனும் தொனிப் பொருளில் நடனங்களை நிர்மாணித்து முன்வைப்பார். | 04 |
| | 1.2. பாவங்களின் (Bhawa) மூலம் (உணர்வுகள் வெளிப்படும் விதத்தில்) கதாபாத்திரங்களை முன்வைப்பார். | • ஒரு நிகழ்வைக் கொண்டு பாவங்களை வெளிக்காட்டுதல்<br>- பிரயத்தனம் (முயற்சி) | • பிரயத்தனம் எனும் பாவத்தை வெளிப்படுத்த, ஒரு நிகழ்வின் கதாபாத் திரங்களுக்காக நடனங் களை நிர்மாணிப்பார். | 03 |
| | 1.3. கிராமிய நடனங்களுடன் தொடர்புபட்ட நடனங்களின் பின்னணியை விளங்கி, அவற்றின் பண்புகளை இனங்கண்டு நடனங்களை நிர்மாணிப்பார். | • சுளகு நடனம், தாள நடனம் போன்றவற்றுடன் தொடர்புள்ள விசேட பண்புகளை அறிதல்<br>• சுளகு நடனம், தாள நடனம் போன்றவற்றை உருவாக்குதல் | • சுளகு அல்லது தாள நடனங்கள் பற்றிய அறிவைப் பெற்று நடன நிர்மாணிப்புக்களை முன்வைப்பார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 2.0 நடனத்தின் அடிப்படைக் கொள்கைகளைப் பின்பற்றி செயன்முறை நுட்பங்களை வெளிக் காட்டுவார். | 2.1. உடலின் நெகிழ்வுத்தன்மையைப் பேணுவதற்கான பயிற்சிகளைச் செய்வார். | • (நெகிழும்) வளையும் நான்கு வகைப் பயிற்சிகள் | • உடல் நெகிழ்வுக்குப் பொருந்தும் நெகிழ்வு அப்பியாசங்கள் நான்கினை முன்வைப்பார். | 02 |
| | 2.2. பாதங்களைப் பயிற்றுவிக்க நடனங்களின் அடிப்படையான பயிற்சிகளைச் செய்வார். | • பாசறம்ப /மண்டிபத 1 - 6 வரை ஹமாறபதய / ஹமாறபதய உடன் (ஹமாற என்பது முடிவு) | • பாரம்பரிய நடனங்களுடன் தொடர்புபட்ட அப்பியாசங் களை ஹமாற பதவுடன் முன்வைப்பார். | 04 |
| | 2.3. சரம்ப பயிற்சிகள் மூலம் சரியான அசைவுகளைக் காண்பிப்பார். | • கொடசரம்ப/ இலங்கம்சரம்ப / தொமினபத 1-4 வரை கஸ்திரம /இரற்றிய /ஹமாராதய உடன் விளம்ப, மத்திய லயம் | • சரியான அசைவுகளை வெளிப்படுத்தும் நோக்கு டன் சரம்ப பயிற்சிகளை யும் முடிக்கும் பதங்களை யும் முன்வைப்பார். | 04 |
| | 2.4 பாரம்பரிய நடனத்தை மையமாகக் கொண்டு அலங்காரமான மாத்திராக்களை உருவாக்குவார். | • மலை நாட்டு/ தாழ் நில / சப்பிரகமுவ பாரம்பரிய நடனங் களைக் கொண்டு அலங்கார மாத்திராக்கள் 02 உருவாக்குதல் (“தநித்தித்த” இற்கு 3 மாத்திராக் கள்) | • பாரம்பரிய நடனங்களின் துணையுடன் அலங்கார மாத்திராக்களை நிர்மாணித்து முன்வைப்பார். | 04 |
| | 2.5 பாரம்பரிய நடனங்களை அதன் நடன அசைவு முறைகளுக்கேற்ப காண்பிப்பார். | • தரம் 6 இல் கற்ற வண்ணத்தை முழுமை. சுலுமெதும் தெதித்த(மாத்திரா2+3)<br>- துரகாவண்ணம (குதிரை),/பவாதி தாளய<br>- கஸ்த்ரம/ இரற்றிய /கலாசம் | • பலவித ரூபக தாளங் களுக்குரிய பாடல் களுடன் தொடர்புபட்ட நடனப் பகுதிகளை முன்வைப்பார். | 02<br><br>03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 2.6. குறியீட்டு முறைமைகளை முறைப்படி காண்பிப்பார். | • தெதித்த தாள குறியீடுகளை இனங்காணல்<br>• தாளம், கவி, சுளகு(குளு கவி). மல்யகன் கவி வண்ணம் குறியீட்டு முறையில் காட்டுதல் | • அட்சரக் குறியீடுகளை எழுதும் மூலவிதிகளைப் பயன்படுத்தி, இதுவரை கற்றிருக்கும் ரூபக தாளங் களுக்குரிய மேளப்பதங் களையும் கவிப்பதங்களை யும் அட்சரக் குறியீட்டில் காட்டுவார். | 03 |
| 3.0 பாரம்பரிய இசைக் கருவிகளையும் அவற்றுக்குரிய புத்தளிப்பு இசைக்கருவிகளையும் இனங்கண்டு அவற்றை இசைக்கும் முறையைக் காண்பிப்பார். | 3.1. பாரம்பரிய இசைக் கருவிகள் பற்றிய தகவல்களை வழங்குவார். | • பாரம்பரிய இசைக்கருவிகள் பற்றிய தகவல்கள் (Daula - தவுல) | • சப்பிரகமுவ பாரம்பரியத் தவிலுடன் தொடர்புடைய விடயங்களை ஆராய்ந்து கற்று தகவல்களை வழங்குவார். | 02 |
| | 3.2. புத்தளிப்புக் கருவிகளை உருவாக்குவார். | • புத்தளிப்புக் கருவிகளை நிர்மாணித்தல் | • தரம் -6இல் நிர்மாணித்த புத்தளிப்புக் கருவிகளை மேலும் மெருகூட்டி அமைத்து முன்வைப்பார். | 02 |
| | 3.3. பாரம்பரிய இசைக் கருவிகளை யும் புத்தளிப்பு இசைக்கருவி களையும் கொண்டு, ஒலிகளை யும் நாதங்களையும் உருவாக்குவார். | • ஒலிகளையும் நாதங்களையும் உருவாக்குதல் | • பலவித ரூபகதாளங்களுக் குரிய பாரம்பரிய இசைக் கருவிகளையும் புத்தளிப் புக் கருவிகளையும் கொண்டு ஒலிகளையும் நாதங்களையும் முன்வைப்பார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 3.4. கருப்பொருளிற்கேற்ப கூட்டு இசையை முன்வைப்பார். | • கருப்பொருள் சமயம் - பெரஹரா | • பெரஹராவை தொனிப் பொருளாகக் கொண்டு, குழு இசையை நிர்மாணித்து முன்வைப்பார். | 04 |
| 4.0 தேசிய கலாசாரத் துடன் பின்னிப் பிணைந்த பாடல்களின் பின்னணியை அவதானித்து தனது பாடல் திறமையை வெளிப்படுத்துவார். | 4.1. அங்கீகரிக்கப்பட்ட பாடல்களின் சமூக கலாசார பின்னணியை விபரிப்பார். | • சுளகு நடனம் (குளு கவி), தாளம், மல்யஹன் - தளமல, வருண என்பவற்றைக் கருதிப் பாடப்படும் கவிகள் வண்ணம் என்பவற்றின் கலாசாரப் பின்னணி | • தேசிய நாட்டார் பாடல் களின் விசேட பண்புகளை ஆராய்ந்து கற்று, அவற்றின் கலாசாரப் பின்னணியை முன்வைப்பார். | 06 |
| | 4.2. வெவ்வேறு தாளங்களுக்கேற்ற வாறு வாய்ப்பாட்டுக்களை வழங்குவார். | • சுளகு நடனம் (குளு கவி), தாளம், மல்யஹன், தளமல மல்யஹன் கவி - தளமல, வருண கவி வண்ணம் பாடுதல் | • பலவித நாதங்களைக் கொண்ட பாடல்களின் தனித்துவமான பண்புகளை, பாடல் தொகுதிகள் மூலம் வெளிப்படுத்துவார். | 06 |
| 5.0 தேசிய நடன சம்பிதாயத்துடன் தொடர்புபட்ட வரலாற்று, கலாசார பின்னணியை ஆராய்ந்து கற்று, அவற்றைத் தேசிய சொத்தாகப் பேணு வதில் அக்கறை செலுத்துவார். | 5.1. தேசிய பாரம்பரிய நடனத்துடன் தொடர்புபட்ட விழுமியங்களைப் பின்பற்றுவார். | • அரங்கேற்றம் ஹிஸ வெஸ் பலந்தீம (தலையில் அணிகலன்களை அணிதல்) உடைகள் அணிதல், மதுபெசீம குருவரந்தீம எனும் கலைகளின் பழக்க வழக்கங்கள் | • புதியவர் ஒருவர் தேசிய பாரம்பரிய நடனத்தில் கடைப்பிடிக்கும் பழக்கவழக்கங்களைக் கற்று, அவற்றை வழிநடத்தப் போதிய மனப்பாங்கை விருத்தி செய்து கொள்வார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 5.2. இலங்கையின் பாரம்பரிய நடனங்களுடன் தொடர்புபட்ட தகவல்களை வழங்குவார். | • பாரம்பரிய நடனத்தின் தகவல் களை முன்வைத்தல் கொஹம்பாகன்காரிய / தொலால்மடுவ பஹன்மடுவ | • பலவித பாரம்பரிய நடனங்களுடன் தொடர் புடைய “சாந்திகர்ம” வழிபாட்டு முறைகளைக் கற்று அவற்றின் தகவல் களை ஒழுங்கு முறையில் முன்வைப்பார். | 03 |
| | 5.3. இலங்கையின் தேசிய நடனக் கலைஞர்களை மதிப்பிட்டு அவர்களின் தகவல்களை முன்வைப்பார். | • ஜே. இ. சேதுராமன்<br>• பொல்வத்தே கோமிஸ்<br>• றத்தெல்லே பொடி மஹாத்தயா | • தேசிய பாரம்பரிய நடனத் துடன் தொடர்புடைய கலைஞர்களை இனங் கண்டு அவர்களை மதிப் பிட்டு கருத்துக்களை முன்வைப்பார். | 02 |
| 6.0 நடனக் கலையின் கலைப் பெறுமதியை மதிப்பிட்டு, அவற்றின் முக்கியத்துவத்தை விமர்சித்துக் கூறுவார். | 6.1. பெரஹரவின் கலைப்பண்புகளை நயப்பார். | • கதிர்காம கோவில் பெரஹரா நடத்துவதன் காரணம் - நடைபெறும் காலம், அதனுடன் இணைந்த பழக்கவழக்கங்கள், விழாவில் இடம் பெறும் நடனங்கள், பாடல்கள், இசை, அலங்கரிப்புக்கள், உடைகள், அணிகலன்கள் | • கதிர்காம கோவில் பெர ஹரவின் கலைப்பண்புகளை இனங்கண்டு, அதனுடன் தொடர்புடைய விடயங் களை நயந்து அவை பற்றிக் கூறுவார். | 03 |
| | 6.2. ஏனைய கலாசாரங்களின் பாரம்பரிய நடனங்களுக்குரிய தனித்துவமான பண்புகளை முன்வைப்பார் | • கரகம் / காவடி நடனத் தகவல்கள் | • வெவ்வேறு கலாசாரங் களுக்குரிய நடனப் பகுதி களின் தகவல்களைச் சேகரித்து, அதன் விசேட பண்புகளை முன்வைப்பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
| --- | --- | --- | --- | --- |
| | 6.3. ஏனைய கலாசாரங்களின் நடனங்களை முன்வைப்பார். | • கரகாட்டம் / காவடி நடனங்களை நிர்மாணித்தல். | • வேறு கலாசாரத்துக்குரிய நடனப் பகுதியொன்றை நிர்மாணித்து முன்வைப்பார். | 03 |
| | 6.4. பல்வகை மக்களின் கலாசார விழாக்களை நயப்பார். | • றம்ழான் விழா தொடர்புபட்ட விசேட பண்புகள் | • பல்வேறு இனத்தாருடன் தொடர்புபட்ட உற்சவங்களின் விசேட பண்புகளை இனங் கண்டு, அதன் கலைப் பண்பு களை நயந்து அதுபற்றி றுவார் | 02 |
| 7.0 அவதானிப்பதன் மூலம் பெறப்பட்ட அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு, நடனக் கலைப் படைப்புக் களை உருவாக்குவார். | 7.1 செவிமடுத்து அங்கீகரிக்கப்பட்ட பாடலொன்றை அதன் விசேட பண்புகளைக் கலந்துரையாடி கருத்துக்களை முன்வைப்பார். | • அத வெஸ்ஸந்தற ராஜ புத்தா/ வெசாக் ககுளு அது அக இந்த பாடல்கள்<br>இசை, பாடல்வரிகள், குரலிசை விளக்கம்/ அர்த்தம் மொழிப்பிரயோகம் | • பாடல் ஒன்றின் பின்னணியை விளங்கி, அதன் விசேட பண்பு களை வெளிப்படுத்துவார். | 02 |
| | 7.2 பாடலுக்கேற்ற நடனத்தை உருவாக்குவார். | • அத வெஸ்ஸந்தற ராஜ புத்தா/ வெசாக் ககுளு அது அக இந்த பாடல்கள் | • பாடல்களுக்கு ஏற்ப நடனங் களை நிர்மாணித்து முன்வைப்பார். | 04 |
| | 7.3. எளிய அலங்காரமொன்றை உருவாக்குவார். | • சூழலில் இருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய மூலப்பொருட்களைப் பயன் படுத்தி அலங்காரமொன்றை நிர்மாணித்தல்.<br>குருத்தோலை தாமரைப்பூ - ஏழு அடுக்குகளைக் கொண்ட தாமரை | • எளிமையான அலங்காரம் (சோடனை) ஒன்றை நிர் மாணிக்கும் முறையைக் கற்று கலைப்பண்புகள் கொண்டதொரு சோடனையை நிர்மாணிப்பார். | 04 |
| | | | | 84 |